Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk
TUESDAY, OCTOBER 26, 2021
செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 26, 2021 | ஒளி: 07 கதிர்: 136 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10

# முன்பள்ளிகளை ஆரம்பிக்க அனுமதி



முன்பள்ளிகளை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை அடிப்படை வசதிகள், கல்வி சேவை இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

சிறுவர் செயலகத்தின் ஊடாக இதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தொடர்ச்சி P2



# அசாத் சாலி மீது குற்றப்பத்திரிகை

ஊடகச் சந்திப்பொன்றில் தெரிவித்த சர்ச்சையான கருத்தொன்று தொடர்பாக, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி மீது குற்றப்பத்திரிகை நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜாவுக்கு முன்னால் வழக்கு அழைக்கப்பட்டபோதே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சரத்துக்களின் கீழ் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் இவ்வாண்டு மார்ச் மாதம் சாலி கைது செய்யப்பட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

நவராத்திரி தாக்குதலை கண்டித்து

# வெள்ளி மாலை ஆர்ப்பாட்டம்

## கோவில்களுக்கு முன்னால் அகல் விளக்கு ஏற்றி, கவனயீர்ப்பில் ஈடுபடவுள்ளோம்

கனகராசா சரவணன்

பங்களாதேஷில் நவராத்திரி தினத்திலே பயங்கரவாதிகளால் இந்து ஆலயங்கள், தாக்கப்பட்டு இந்துக்களின் வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு இந்து துறவி உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் உயிர்நீத்த உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டியும், நாட்டிலுள்ள இந்து ஆலயங்களில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29) மாலை ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்தனையும் கண்டன ஆர்ப்பாட்டமும் இடம்பெறவுள்ளதாக, இந்து அமைப்புகள், இந்துக் கோவில்கள், இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் சி.வரதநிரோசன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



கொரோனாவால் உடைந்து விழுந்த

# உலகை கட்டியெழுப்ப மாநாடு அவசியம்



கொரோனா தொற்றினால் உடைந்து விழுந்துள்ள உலகை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுப்பதற்கு உலகத் தரம் வாய்ந்த மாநாட்டை கூட்ட வேண்டும் என்று தெரிவித்த வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, இந்த நெருக்கடிக்கு தனி நாடுகளாக இருந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் தெரிவித்தார்.

கொட்டாவ, மாலபல்லவில் லங்கா சதொச கிளையை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று (25) கலந்து கொண்ட போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



வைத்தியசாலை உணவில் பல்லி;

# சிற்றுண்டிச்சாலைக்கு பூட்டு

வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இயங்கிவந்த சிற்றுண்டிச்சாலை, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய, பொதுச் சுகாதார பரிசோதகர்களால் தற்காலிகமாக மூடி சீல் வைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# கப்பல் கட்டும் நிறுவன அதிகாரிகள் பிரதமருக்கு நன்றி தெரிவித்தனர்

கொவிட் தொற்று காலப்பகுதியில் இரு கப்பல்களை தயாரித்து நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதற்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் நிறுவனத்தின் (Colombo Dockyard PLC) தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவை, அலரி மாளிகையில், நேற்று (25) சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# அவரவர் தேவைக்கேற்ப உள்ளே போட முடியாது

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன பொறுப்புக் கூற வேண்டுமாயின் ஆணைக்குழுவில் அதற்கு தெளிவான சாட்சிகள் இருக்க வேண்டுமெனத் தெரிவித்த பத்திக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, ஆணைக்குழுவில் தெளிவான சாட்சி எதுவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இல்லை. அவரவர் தேவைக்கேற்ப எவரையும் உள்ளே போட முடியாது என்றார்.

தொடர்ச்சி P2

# கைகளுடன் கால்களுக்கும் விலங்கிட வேண்டும்



இந்த நெனோ நைட்ரிஜன் உர இறக்குமதியில் பல கோடி ரூபாய் மோசடி இடம்பெற்றுள்ளதென தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், மக்களது பணத்தை முறைகேடாகப் பயன்படுத்துபவர்களின் கைகளில் மட்டுமல்ல கால்களிலும் விலங்குகள் மாட்டி இழுத்துச் செல்லப்பட வேண்டும் என்றார்.

நைட்ரிஜன் உர இறக்குமதியில் முறைக்கேடு இடம்பெற்றிருப்பதாக கூறி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று (25) ஐக்கிய மக்கள் சக்தி, முறைப்பாடு செய்தது.

தொடர்ச்சி P2

# 2022 முதல் டிஜிட்டல் அடையாள அட்டை

உலகிலேயே அதியுயர் தொழில்நுட்பம் வாய்ந்த டிஜிட்டல் தேசிய அடையாள அட்டையை அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் அறிமுகப்படுத்தத் தயார் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2







# 7.30 முதல் 1.30 மணிவரை ஆசிரியர்கள் கற்பிப்பார்கள்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு: மேலதிக வேலையை செய்யோம் என்கிறார்

காலை 7.30க்கு பாடசாலைகள் ஆரம்பிக்கும். கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் பிற்பகல் 1.30க்கு நிறைவடையும் அந்த நேரத்துக்குள் கற்பித்தல் செயற்பாடுகளை மட்டுமே ஆசிரியர்கள் முன்னெடுப்பார்கள் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# உயிலங்குளத்தில் விவசாயிகள் போராட்டம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்






விவசாயிகளுக்கு உடனடியாக இரசாயன உரத்தை வழங்கக் கோரியும் அரசாங்கத்தின் திட்டமிடாத நடவடிக்கையை கண்டித்தும், மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில், நேற்று (25) காலை 10.30 மணியளவில், மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் பகுதியில், கண்டனப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

இரசாயன உரத்துக்கு அடிமையானதால்

# 60 இலட்ச சிறுநீரக நோயாளர்கள் உள்ளனர்



எமது நாட்டு மக்கள் இரசாயன உரத்துக்கு அடிமையாகி 60 வருடங்கள் கடந்துள்ளன எனத் தெரிவித்த காணி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, இந்த இரசாயன உர பாவனையால் நாட்டில் இன்று 60 இலட்சம் சிறுநீரக நோயாளர்கள் இருக்கின்றனர் என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



கிஹான் பிலபிட்டியவுக்கு எதிரான

# வழக்கை விசாரிக்கத் தடை

மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டியவுக்கு எதிராக நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையைத் தொடர்வதற்கு தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (25) நீதிப் பேராணை (ரிட்) உத்தரவு பிறப்பித்தது.

மேலும், அந்த வழக்கின் விசாரணையை தடுக்கும் கட்டளையும் நீதவானுக்கு பிறப்பிக்கப்பட்டதுடன், நீதிபதி கிஹான் குலதுங்கவை சந்தேக நபராக பெயரிடும் சட்டமா அதிபரின் தீர்மானத்தை இரத்து செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சி P2

நைட்ரஜன் திரவ உர இறக்குமதி மோசடி

# சீ.ஐ.டிக்கு சென்றது பிரதான எதிர்க்கட்சி



நைட்ரஜன் திரவ உரங்களை இறக்குமதி செய்தபோது இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள்,

தொடர்ச்சி P2

# புரியாணியை சாப்பிட்டிருந்தால் மைத்திரியிடமே கேட்க வேண்டும்



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை நியமித்தது எமது அரசாங்கம் இல்லை எனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி, எனவே குறித்த ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருடன் புரியாணி உண்டார்கள் என்றால், அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பதே எமது நிலைப்பாடாகும் என்றார்.

எனினும், நாம் நம்பவில்லை. ஆணைக்குழுவுக்கு நியமிப்பவர்கள் அவ்வாறான விடயத்தை செய்வார்கள் என்று. ஆனால் இந்த நாட்டில் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தாலும் எவரையும் தண்டிக்கும் அதிகாரம் அந்த ஆணைக்குழுவுக்கு இல்லை என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அசாத் சாலி மீது குற்றப்பத்திரிகை

இதேவேளை, அசாத் சாலியின் வாகனத்துக்குள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பிஸ்டலொன்றும், ரவைகளுடன் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அப்போது அசாத் சாலியின் கருத்துகள் தொடர்பாக சில முறைப்பாடுகள் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திலும், பொலிஸ் தலைமையகத்துக்கும் கிடைக்கப் பெற்றதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

## அவரவர் தேவைக்கேற்ப உள்ளே போட முடியாது

ஆனால், அவருக்கு எதிராக வழக்கு தொடர முடியுமா? என ஆராயுமாறு ஆணைக்குழு அறிக்கையில் உள்ளது என்றார். அதனை சட்டமா அதிபர் திணைக்களம் தேடியறிய வேண்டும். அதைவிடுத்து பேராயருக்கோ அல்லது வேறு எவருக்கோ தீர்மானிக்க முடியாது.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டதாக எவரும் சாட்டியளிக்கவில்லை.

ஆனால், மௌலவிமார்களுடன் கலந்துரையாடி புரியாணி உண்டவர்கள்தான் இந்த ஆணைக்குழுவில் உள்ளனர். எனவே, இந்த ஆணைக்குழுவின் தீர்மானங்கள் குறித்து எமக்கும் பிரச்சினை உள்ளது என்றார்.

## உயிலங்குளத்தில் விவசாயிகள்...

முன்னதாக, உயிலங்குளம் சந்தியில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி, உயிலங்குளம் - மன்னார் வீதியில் அமைந்துள்ள உயிலங்குளம் கமநல சேவைகள் நிலையம் வரை சென்று, அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். வினோ நோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர சபை தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்டனி டேவிட்சன், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, மன்னார் மாவட்டச் செயலாளரிடம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரை பெற்றுக்கொண்ட மாவட்டச் செயலாளர், குறித்த மகஜரை ஜனாதிபதிக்கு உடனடியாக கையளிப்பதாகத் தெரிவித்தார்.

விவசாயிகள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்தவர்கள். எனினும், எந்த சூழ்நிலையிலும் மனம் தளர்ந்து போகாமல், தலை நிமிர்ந்து நிற்பார்கள் என நம்புவதாகவும், அவர் தெரிவித்தார்

மேலும் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோ நோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்தன் ஆகியோருக்கும் கையளிக்கப்பட்டதோடு, விவசாயிகளுக்கு உடனடியாக இரசாயன உரத்தை வழங்க துரித நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்றும், விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

## சீ.ஐ.டிக்கு சென்றது பிரதான...

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று (25) முறைப்பாடு பதிவு செய்தனர். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி.அலவத்துவல மற்றும் முஜிபூர் ரஹ்மான் உள்ளிட்ட குழுவினர் சீ.ஐ.டியில் பிரசன்னமாகியிருந்தனர்.

நைட்ரஜன் திரவ உர இறக்குமதியில் பாரிய நிதி மோசடி நடந்திருப்பதாகவும், இதுதொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் தமது முறைப்பாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அலவத்துவல எம்.பி தெரிவித்தார்.

ஊழலில் ஈடுபட்டவர்கள் எந்த பதவிநிலையில் இருந்தாலும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வெள்ளி மாலை ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள திருச்சொந்தூர் முருகன் கோவில் மண்டபத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், “நவராத்திரி தினத்தில் பயங்கரவாதிகளின் இந்தக் கொலைவெறி தாக்குதலை இலங்கை வாழ் இந்துக்கள், இந்து அமைப்புக்கள், இந்துக் கோவில்கள், இந்து நிறுவனங்கள் கூட்டமைப்பாக இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

“இவ்வாறனா இந்துக்களுக்கு எதிராக இம்பெற்ற தாக்குதலைக் கண்டித்தும் அந்த தாக்குதலில் உயிர் நீத்த உமது உறவுகளுக்கு ஆத்மசாந்தி வேண்டியும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நாடளாவிய ரீதியில் கோவில்களுக்கு முன்னால் ஈடுபட எமது கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

“இந்தப் பயங்கரவாதத்துக்கு எதிராக ஒருமித்துக் குரல் கொடுக்க அன்றை தினம் கோவில்களுக்கு முன்னால் அகல் விளக்கு ஏற்றி, கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளோம்” என்றார்.

## கப்பல் கட்டும் நிறுவன அதிகாரிகள் பிரதமருக்கு நன்றி நவிழ்ந்தனர்

35 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை கொண்ட ‘அல்கா’ மற்றும் ‘ஷான் அல் அராக்’ ஆகிய இரு கப்பல்கள் கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டப்பட்டதுடன், அவ்விரு கப்பல்களும் எதிர்வரும் 4ஆம் திகதி அந்நாட்டில் வைத்து ஈராக் அரசாங்கத்துக்கு கையளிக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி கப்பல் பழுபார்ப்பு நடவடிக்கைகளுக்காக பிராந்திய கிளையொன்றை எதிர்வரும் 2ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தை மையமாகக் கொண்டு முதல் முறையாக ஆரம்பிப்பதாக, கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி டீ.வி. அபேசிங்க தெரிவித்தார்.

திருகோணமலைக்கு மேலதிகமாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை மையமாகக் கொண்டு தற்போது காணப்படும் அலுவலகத்தின் ஊடாக தமது சேவையை எதிர்காலத்தில் விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டார்.

பிரான்சின் ஒரேஞ்ச் மெரைன் நிறுவனத்திற்காக உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய கப்பலொன்று கட்டப்பட்டு வருவதுடன், அது கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டப்படும் இரண்டாவது பெரிய கப்பலாகும். அவ்வேலைத்திட்டமானது 45 மில்லியன் அமெரிக்க டொலராகும். இதற்கு மேலதிகமாக நோர்வே அரசாங்கத்திற்காக சுற்றுச்சூழல் நட்புடன் கூடிய 6 கப்பல்கள் கொழும்பு கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டப்பட்டு வருகின்றன.

இக்கப்பல்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் நிறுவனம் பிரதமருக்கு உத்தியோகப்பூர்வமாக அழைப்பு விடுத்தது.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பலமாக விளங்கி கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் நிறுவனம் 2021ஆம் ஆண்டில் 100 மில்லியன் அமெரிக்க டொலரையும், 2022ஆம் அண்டில் 120 மில்லியன் அமெரிக்க டொலரையும் வருவாயாக ஈட்டுவதற்கு எதிர்பார்க்கிறது.

திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை பிராந்திய கிளைகள் ஊடாக மேலும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொழும்பு டொக்யார்ட் கப்பல் கட்டும் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.

## கைகளுடன் கால்களுக்கும் விலங்கிட...

அதன்பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒக்டோபர் 18ஆம் திகதி விவசாயிகள் நிதியம் ஒன்றை பதிவு செய்துள்ளனர். கொழும்பு 7இல் உள்ள பெண்மனி ஒருவரையும் ஆண் ஒருவரையம் பணிப்பாளராக நியமித்துள்ளனர்.

இந்த நிதியத்துக்கு யாப்பு இல்லை, விவசாயி இல்லை. கணக்காய்வாளர் யார் என தெரியாது . எந்தவோர் அறிக்கையும் இல்லாமல் நகர சபைக்கு அருகிலுள்ள மக்கள் வங்கி கிளையில் வங்கி கணக்கு ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அந்த கணக்கில் 29 கோடியை வைப்பிலிட்டுள்ளனர். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படும் நெனோ உரத்துக்கு செலுத்த ஆரம்பித்துள்ளனர். ஆனால் 9 கோடி மாத்திரமே செலுத்தியுள்ளதுடன், 20 கோடி மீதமாகவுள்ளது. இது டொலரின் மீதமாகவுள்ள நிலையில், அதனை எமக்கு ரூபாவில் தருமாறுஅந்த வங்கி கணக்கின் உரிமையாளர் தெரிவித்துள்ளனர். உரத்தை இறக்குமதி செய்யும் போது, எவ்வித விலை மனு கோரல்களும் முன்வைக்கப்படவில்லை. அவசர ஓடர் செய்ய வேண்டுமாயின் அமைச்சரவையில் சரி அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

அமைச்சரவை அனுமதி இல்லை, விலைமனுகோரல் இல்லை. எனவே எவ்வித அடிப்படையும் இன்றியே இந்த உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

சுங்க கட்டளைச் சட்ட விதிமுறைகளை மீறியே இந்த உரம் சுங்கத்திலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டுள்ளது.

எந்தப் பொருளையும் இறக்குமதி செய்யும் நிறுவனத்துக்கு டின், வெட் நம்பர் இருக்க வேண்டும். ஆனால் இவை எதையும் சுங்கத்துக்கு முன்வைக்கவில்லை இறக்குமதி ஆணையாளரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். அதுவும் இந்த நிறுவனத்துக்கு வழங்கப்படவில்லை.

எனவே, ஜனாதிபதி செயலாளரின் அழுத்தம் மற்றும் விவசாயத்துறை அமைச்சரின் அழுத்தத்தலேயே சுங்கம் இந்த உரத்தை விடுவித்துள்ளது.

எனவே, இந்த விசாரணையை மூடி மறைக்க வேண்டாம். ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜயசுந்தரவின் கடித்துக்கு மாத்திரம் விசாரணை நடத்த வேண்டாம் என குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் தெரிவிக்கின்றோம் என தெரிவித்த அவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியில் எமது முறைப்பாட்டையும் விசாரிக்க வேண்டும் என்றார்.

## 2022 முதல் டிஜிட்டல்...

உலகைக் கையாள்வதில் இலங்கை நவீனமயமாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்றையதினம் (25) இடம்பெற்ற ‘லங்கா கியூஆர் வலையமைப்பை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் பணம் அல்லது தேசிய அடையாள அட்டை அல்லது இவை அனைத்துக்கும் முன்னர், பணத்தை பயன்படுத்தாத பொருளாதாரத்தை நோக்கி செல்ல தேவையான சூழலை உருவாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எந்த வசதிகள் இருந்தாலும், நாட்டு மக்கள் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தவில்லை எனின் முயற்சிகள் பலனளிக்காது என்றார். ‘LankaQR’ டிஜிட்டல் தொழில்நுட்பமானது ‘QR’ குறியீட்டு முறையைப் பயன்படுத்தி பண பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கு உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புரியாணியை சாப்பிட்டிருந்தால்...

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற குழு கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றதாகத் தெரிவித்த அவர், இதன்போது 69 இலட்சம் பேர் வாக்களித்தமை பிழையான விடயங்களை சீராக்கவே அன்றி, பிழையான செயற்பாடுகளை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதற்கல்ல என்பதை ஜனாதிபதி தெளிவாக குறிப்பிட்டார் என்றார்.

நாட்டின் இன்றைய நிலையில், தான் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொறுப்புகளும் கடமைகளும் நாட்டு மக்களுக்கும் உண்டென ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாகத் தெரிவித்தார்.

30 வருட யுத்தத்தை நிறைவு செய்ய தீர்மானிக்கப்பட்ட போது, இதேப்போல் எமது நாட்டை பல அரச சார்பற்ற நிறுவனங்களின் தலையீட்டுடன் பல குழுக்கள் யுத்தத்துக்கு எதிரான நிலைப்பாட்டை மக்களிடம் முன்னெடுத்தனர். இந்த குழுக்களின் அழுத்தங்களுக்கு அடிபணிய வேண்டிய நிலை மக்களுக்கு இருந்தது.எனினும் அந்த சந்தர்ப்பத்தில் சரியான தீர்மானத்தை முன்னெடுத்து சரியான பாதையில் பயணித்தால், முழு உலகமே மோற்கடிக்க முடியாதென தெரிவித்த பயங்கரவாதத்தை தோற்கடித்து இலங்கையில் சமாதானத்தை நிலை நாட்ட முடிந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்ததாக சுட்டிக்காட்டினார்.

வருடாந்தம் புற்றுநோயாளும் சிறுநீரகப் பிரச்சினையாலும் பாரியளவில் உயிரிழப்புகள் பதிவாகின்றன. இதற்கான அடிப்படை காரணம் இரசாயன உரப் பாவனை என வைத்தியர்கள் தெரிவிக்கும் நிலையில், இந்த நிலையை மாற்றவே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அது பிரபலமான தீர்மானமாக இருக்கலாம். ஆனால் அது மக்கள் நன்மைக்கான தீர்வு. எனவே அந்த தீர்மானத்தை பலப்படுத்தி அத்தீர்மானத்துடன் ஒன்றித்து செல்வது நாட்டை நேசிக்கும் மக்களின் பொறுப்பு மற்றும் கடமை என்றார்.

## முன்பள்ளிகளை...

மாவட்ட கொவிட்-19 தொற்றொழிப்பின் குழுவின் அனுமதியுடன், பொது சுகாதார பரிசோதகரின் கண்காணிப்பின் கீழ் சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய முன்பள்ளிகளை ஆரம்பிக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

முன்பள்ளிகளுக்கு தேவையான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதற்கமைய, 16,000-இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளுக்கு உடல் வெப்பத்தை சோதிக்கும் கருவி, தொற்று நீக்கும் திரவம் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## உலகை கட்டியெழுப்ப...

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகம் எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் இவ்வாறான மாநாடு அமெரிக்காவில் நடத்தப்பட்டதாக அமைச்சர் நினைவூட்டினார். மேலும், அவ்வாறானதொரு மாநாட்டுக்கு உலகம் இன்னும் தயாராகவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொரோனாவுடனா நெருக்கடி இன்றைய நாளை விட நாளை அதிகமாக இருக்கும் என்றும், அரசியல், கட்சி அல்லது வண்ணத்தைப் பொருட்படுத்தாமல் அனைவரும் தங்கள் நாட்டு மக்களை நம்பி மேலும் ஏதாவது வேலை செய்ய வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## சிற்றுண்டிச்சாலைக்கு பூட்டு

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இயங்கிவந்த சிற்றுண்டிச்சாலையில் நேற்று முன்தினம் நோயாளியொருவர் வாங்கிய உணவுப் பொட்டலத்தில் பல்லியொன்று இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் புளியந்தீவு பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். சந்திரசிறியின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இது தொடர்பில் நேற்றைய தினம் (25) போதனா வைத்தியசாலையில் இயங்கிவந்த சிற்றுண்டிச்சாலைக்கு எதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதனை ஆராய்ந்த நீதிபதி, குறித்த சிற்றுண்டிச்சாலையை தறிகாலிமாக மூடுவதற்கான உத்தரவை விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து புளியந்தீவு பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.சந்திரசிறியின் தலைமையில், பொதுச் சுகாதார பரிசோதகர்களால் சிற்றுண்டிச்சாலைக்கு சீல் வைக்கப்பட்டது.

## 7.30 முதல் 1.30 மணிவரை...

ஆரம்பப் பாடசாலைகள் யாவும் நேற்று (25) ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர் எனத் தெரிவித்த அவர், மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மேலே குறிப்பிட்ட நேரத்துக்குள் மட்டுமே கற்பிப்போம் என்றார்.

பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளைத் தவிர இதர வேலைகள் எவற்றையும் ஆசிரியர்கள் செய்யமாட்டார்கள். அதேநேரத்தில் சம்பள முரண்பாடு உள்ளிட்ட எமது கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரையிலும் எமது போராட்டத்தை முன்னெடுப்போம்.

அதனடிப்படையிலேயே கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக, நேற்று (25) பாடசாலைகள் விட்டதன் பின்னர் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது என்றார். (படம்: பிரதீப் பத்திரண)

## 60 இலட்ச சிறுநீரக...

தொடர்ந்து தெரிவித்த அவர், அதேப்போல் இரசாயன உரப் பாவனையால் எமது நாட்டில் 30,000 புற்றுநோயாளர்கள் இருக்கின்றனர். அதேப்போல் வருடாந்தம் 12,000 சிறுநீரக நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், 10,000 பேர் வருடாந்தம் இறக்கின்றனர் என்றார்.

அதனால் தான் அதிலிருந்து விடுபடுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார். உண்மையில் நாங்கள் நல்ல விடயத்தை முன்னெடுத்தாலும் விவசாயிகளை தவறாக வழிநடத்த சிலர் இருக்கின்றனர்.விசேடமாக சஜித் பிரேமதாசவின் கூட்டம், அநுர குமாரவின் கூட்டமே இவர்களை வழி நடத்துகிறது என்றார்.

சிறுநீரக நோயாளர்களின் இரத்தத்தை சுத்தம் செய்ய வருடாந்தம் பில்லியன் கணக்கான பணம் செலவிடப்படுகின்றது. எனவே, இதற்காக செலவிடும் நிதியை குறைக்க முடிந்தால் எம்மால் விவசாயிகளின் உற்பத்திக்கு அதிக பணத்தை கொடுக்கலாம் என்றார்.

அத்துடன் இயற்கை உரத்தைப் பயன்படுத்தி தானிய வகைகள், மரக்கறி, பழங்கள் என்பவற்றை உற்பத்தி செய்யும் நாடாக மாத்திரமின்றி சுற்றலாப் பயணிகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்கலாம். ஆனால் நாம் இன்னும் 10 வருடங்களுக்கு இரசாயன உரத்தைப் பயன்படுத்தினால் நாட்டில் 50 சதவீதமானவர்கள் நோயாளர்களாக மாறிவிடுவர் என்றார்.

## வழக்கை விசாரிக்க தடை

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய தனக்கு எதிராக பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து, நுகேகொட நீதவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணையை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரி முன்னாள் நீதிபதி கிஹான் பிலபிட்டிய இந்த ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக கணேபொல அடங்கிய குழாம், நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்ட பொலிஸ்மா அதிபருக்காக ஆஜரான ஜனாதிபதி வழக்குரைஞர் உதித இகலஹேவா, மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க போதுமான சாட்சியங்கள் விசாரணைகள் மூலம் கண்டறியப்படவில்லை என்று மன்றில் அறிவித்தார்.

கொரோனா வைரஸின் புதிய திரிபு;

# நாட்டில் டெல்டா பிளஸ் பரவலாம்




கொரோனா வைரஸின் புதிய திரிபான டெல்டா பிளஸ், இலங்கையில் பரவுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவி விசேட வைத்திய நிபுணர் பத்மா குணர்தன எச்சரித்துள்ளது.

புதிய வைரஸ் திரிபாக டெல்டா பிளஸ் வைரஸ் இனங்காணப்பட்டுள்ளது. இந்த வைரஸ் மனிதர்களுக்கு எந்தளவான பாதிப்புக்களை ஏற்படுத்தும், எவ்வாறு இந்த வைரஸ் பரவும் என்பது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் இதுவரையில் எதனையும் கூறவில்லை எனவும் அவர்

**இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவி விசேட வைத்திய நிபுணர் பத்மா குணர்தன மேலும் தெரிவித்தார்**

கூறினார். கொரோனா வைரஸின் ஏனைய திரிபுகள்போல இந்த வைரஸும் நாட்டுக்குள் பரவுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவி விசேட வைத்திய நிபுணர் பத்மா குணர்தன மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதியை சந்தித்தார் ஜப்பான் தூதுவர்

தனது சேவைக் காலத்தை முடித்துக்கொண்டு, நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சுகியாமா அக்கிரா (Sugiyama Akira) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவை சந்தித்து உரையாடியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (25) நடைபெற்ற இச்சந்திப்பில், ஆறு இலட்சம் அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசிகளை ஜப்பானிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கும், சுகியாமா அக்கிராவால் பல்வேறு வழிமுறைகளில்



இந்நாட்டுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட சேவைகளை ஜனாதிபதி இதன்போது பாராட்டியுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை பலப்படுத்திக்கொண்டு, தேவைப்படும் எந்தவொரு தருணத்திலும் இலங்கைக்கான ஒத்துழைப்பு வழங்க தான் முயற்சிப்பதாக, ஜனாதிபதியிடம் ஜப்பானியத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.



# சி.ஐ.டியின் பணிப்பாளர் என நாடகமாடியவர் கைது

தன்னை சி.ஐ.டியின் பணிப்பாளர் எனப் பொய்கூறி தொலைபேசி ஊடாக பயாகல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை ஏமாற்ற முயற்சித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பயாகல பிரதேசத்தில் இருதரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக கைது செய்யப்பட்ட நபரை விடுதலை செய்வதற்காக, 47 வயதுடைய நபர் ஒருவர் தன்னை சி.ஐ.டியின் பணிப்பாளர் என பொய்கூறி, கைது செய்யப்பட்ட நபரை விடுதலை செய்ய வேண்டும் என அப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கூறியுள்ளார்.

**கைது செய்யப்பட்ட நபரை அடுத்த மாதம் 02ஆம் திகதி வரையில் தடுப்புக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

மேலும், கைது செய்யப்பட்ட நபரை விடுதலை செய்யவில்லை என்றால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்யப்போவதாகவும் தொலைபேசியூடாக குறித்த நபர் மிரட்டியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நபரை அடுத்த மாதம் 02ஆம் திகதி வரையில் தடுப்புக் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பேருவளையில் 114பேருக்கு டெங்கு

துசித குமார டி சில்வா

பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் இந்த வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் டெங்கு நோயாளர்கள் 114 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஒக்டோபர் 25 வரையிலானக் காலப் பகுதியில் 114 பேருக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டிருப்பதோடு, கடந்த செப்டெம்பர் முதல் இதுவரையிலானக் காலப்பகுதியில் மாத்திரம்



27 பேருக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இம்மாதத்தில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களில் 95 சதவீதமானோர் கட்டட நிர்மாணப் தொழில் ஈடுபடுபவர்கள் என அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் தெரிவிக்கிறார்கள்.

# மக்களுக்கு சாபமாக அரசாங்கம் மாறியுள்ளது

நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்று ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், அவர்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களுக்கும் சாபமாக மாறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக தற்போதைய அரசாங்கம், பிரச்சினைகளில் இருந்து இலாபமீட்டுவதற்குப் பார்ப்பதாகவும் கூறிய அவர், நாட்டின் பொருளாதாரம் பாரதூரமான நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக தற்போதைய அரசாங்கம்இ பிரச்சினைகளில் இருந்து இலாபமீட்டுவதற்குப் பார்ப்பதாகவும் கூறினார்**

ஒட்டுமொத்த நாட்டு மக்களின் எதிர்காலம் மற்றும் வாழ்க்கையை ராஜபக்‌ஷக்கள் நாசம் செய்துகொண்டிருக்கிறார்கள். உடனடியாக நாங்கள் சொல்வதை செய்ய வேண்டும் என இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களைச் செலுத்தி வருகின்றன எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி கூறினார்.




# யானைகளுக்கு வேலி

ப

யானைகளுக்காக அமைக்கப்படும் வேலிகளுக்கு மின்சாரத்தை வழங்க இதுவரை பயன்படுத்தப்பட்ட அதிக செலவுமிக்க எனஜைசர் இயந்திரம், இலங்கையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றினால் 76,300 ரூபாய்க்கு உற்பத்தி செய்யப்படுவதாக வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு தொடர்பான ஆலோசனைக் குழுவில் தெரியவந்தது.

பாராளுமன்றத்தில் அண்மையில் அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க தலைமையில் நடைபெற்ற வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இந்த இயந்திரம் பற்றிய தகவல்கள் வெளியாகின. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆலோசனைக்கு அமைய நனோ விஷன் அநுராதபுர பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பில் இந்த உற்பத்தியை அறிமுகப்படுத்தி கருத்துத் தெரிவித்த ஜீ.வி.கே.சமரநாயக்க, இதுவரை 400 உபகரணங்கள் விற்பனை



செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார். அத்துடன், சுமார் 10 கிலோமீற்றர் தூரத்தை இந்த இயந்திரத்தினால் பாதுகாக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, குறித்த உபகரணத்தைப் பயன்படுத்துவதற்கு இதன் தொழில்நுட்ப ரீதியான துல்லியத் தன்மை குறித்து மேலும் ஆராய்ந்து பார்க்க விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

# அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பங்காளிகள் ஏமாற்றம்



அரசாங்கம் எடுக்கும் சில தீர்மானங்களால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் ஏமாற்றமடைந்துள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்துக்கு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

இந்த நெருக்கடிக்கு தீர்வைக் காண அரசாங்கத்தின் அனைத்துத் தரப்பினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இதன்போது தெரிவித்துள்ளார். அத்தோடு, அரசாங்கத்தை நாட்டுப் பக்கமும், நாட்டு மக்களின் பக்கமும் திருப்புவதற்கான நடவடிக்கைகளை தாம் முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

மர்ஹூம் நளீம் ஹாஜியாருக்கு

# விரைவில் நினைவு முத்திரை

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்வித்துறையில் மாத்திரமன்றி மாணிக்க வர்த்தகத்துறையிலும் நாட்டுக்கு பாரிய பங்களிப்பு செய்த மர்ஹூம் எம். ஐ. எம். நளீம் ஹாஜியாருக்கு நினைவு முத்திரை வெளியிடுவதன் அவசியம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுடன் கலந்துரையாடி விரைவில் அதனை வெளியிட நடவடிக்கையெடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

மர்ஹூம் நளீம் ஹாஜியார் ஞாபகார்த்த பேருரை மன்றத் தலைவர் சட்டத்தரணி அஷ்ஷெய்க் எம். ரிப்கி தலைமையிலான உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினரை அவரது பேருவளை இல்லத்தில் சந்தித்தனர்.

இதன்போது மர்ஹூம் நளீம் ஹாஜியாருக்கு நினைவு முத்திரை வெளியிடப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் மேற்படி சங்க உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டு வந்ததோடு கோரிக்கை கடிதத்தையும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட மர்ஜான் பளீல் எம்.பி இங்கு கருத்துத்தெரிவிக்கும்போது,

ஜாமியா நளீமிய்யா கலாபீடம், இக்ரா தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றை எமது பேருவளையில் உருவாக்கி எமது சமூகத்தின் கல்விக் கண்களைத் திறந்த பெரும் சமூகத் தலைவராக மர்ஹூம் நளீம் ஹாஜியாரை நாள் பார்க்கின்றேன்.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் இதன்போது தெரிவித்தார்.

# ‘விரலால் தள்ளினால் கூட அரசாங்கம் விழுந்துவிடும்’

இளைஞர், யுவதிகள் நாட்டை விட்டு வெளியேற நினைக்கிறார்கள். தலைவர்களின் உருவ பொம்மைகளை எரித்து மக்கள் தங்களது ஆத்திரத்தைத் தீர்த்துகொள்கிறார்கள் என அரசாங்க தாதியர் சங்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த சமன் ரத்னபிரிய, தற்போதைய அரசாங்கம் நாட்டை நாசமாக்கிவிட்டது என சிறுபிள்ளைக்குக்கூட தெரியும். விரலால் தள்ளினால் கூட விழுந்துவிடும் நிலையில் அரசாங்கம் இருக்கிறது. பொருளாதாரம் உள்ளிட்ட எதனையும் தற்போதைய அரசாங்கத்தால் சரியாக செய்ய முடியாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள இளைஞர், யுவதிகள் நாட்டை விட்டு



வெளியேற நினைக்கிறார்கள். கடந்த வாரத்தில் மாத்திரம் வாழ்க்கை செலவு 40 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தலைவர்களின் உருவ பொம்மைகளை எரித்து ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளும் நிலைமையில் மக்கள் இருக்கிறார்கள். இப்பிரச்சினையை அரசாங்கமே உருவாக்கியது எனவும் அவர் கூறினார்.

தனியார்துறை ஊழியர்களின் மாதாந்த சம்பளம் வெறும் 16,600 ரூபாய் மாத்திரமே. இந்த பணத்தை வைத்துக் கொண்டு வாழ முடியுமா? பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். ஆனால், சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வெளிநாடுகளில் இருந்து கடனைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் தொடர்ந்து முயற்சித்தது. எனினும் வெளிநாடுகளில் இருந்து கடனைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது எனவும் அரசாங்க தாதியர் சங்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

அறிவித்தல்



கிலினிகொன் பயோடெக் (தனியார்) நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதியாக சேவையாற்றிய தேசிய அடையாள அட்டை இல. **843294952V** உடைய **பீ.எச். தாரக பிரியந்த** சில்வா என்பவர் **2021.10.01** ஆம் திகதி முதல் எமது நிறுவனத்தில் சேவையில் இருந்து விலகிவிட்டார் என்பதுடன் இந்த திகதிக்கு பிறகு அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பு கூற முடியாது என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்துகின்றோம்.





ஆரம்ப பாடசாலைகள் ஆரம்பம்;

# 70 சதவீதமான மாணவர்கள் வருகை

கிழக்கு தமிழ்மிரர் நிருபர்கள்

சுமார் ஆறு மாதங்களின் பின்னர் ஐந்தாம் ஆண்டு வரையான ஆரம்ப பாடசாலைகள், நாடளாவிய ரீதியில் நேற்று (25) திறக்கப்பட்டன

இதன்படி, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட ஆரம்ப பாடசாலை மாணவர்கள், சுகாதார நடைமுறைகளைப் பேணி மிகவும் ஆர்வத்துடன் வருகை தந்தனர்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்வி கோட்டத்தில் 15 ஆரம்ப வகுப்பு பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி கோட்டக்கல்வி அதிகாரி எம்.எம்.கலாவுதீன் தெரிவித்தார்.

70 சதவீத்துக்கும் அதிகமான மாணவர்கள் வருகை தந்திருந்ததாகவும் பெரும்பாலும் எல்லாப் பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் வரவும் 100 சதவீதம் இருந்ததாகவும் அதிபர்கள் தெரிவித்தனர்.

கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பிரிவுக்குட்பட்ட 66 பாடசாலைகளில் ஆரம்ப பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கும் மாணவர்களின் வரவு 65 - 75 சதவீதத்துக்கு இடைப்பட்டிருந்ததாகவும் அதிபர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அம்பாறை, அக்கரைப்பற்று, திருக்கோவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய வலய கல்வி அலுவலகங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்ப பிரிவுகளும் கல்வி நடவடிக்கைக்காக மீள ஆரம்பிக்கப்பட்டன.

வகுப்பறைகளில் மாணவர்கள் சமூக இடைவெளிகளைப்பேணி, முகக் கவசங்களை அணிந்திருந்தனர்.

திறக்கப்பட்ட பாடசாலைகளுக்கு சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகள் விஜயம் செய்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பெரும்பாலான பாடசாலைகளில் பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை காண முடிந்தது.





## வறிய குடும்பத்துக்கு வீடு...

சுவிட்சர்லந்து பேர்ன் மாவட்டம் மேல் மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தால், திருகோணமலை, செல்வநாயகபுரம், உதயபுரியில் வீடு அற்ற ஒரு குடும்பத்துக்கு வீட்டுக்கான அங்குரார்ப்பண பணிகள், நேற்று முன்தினம் (24) ஆரம்பிக்கப்பட்டன.
இவ்வீட்டிகான ஆரம்பக்கட்ட பணிகள், குறித்த மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் ச.திருச்செந்தூரன் தலைமையில் நடைபெற்றன.
(படங்கள் – அ.அச்சுதன்)

மட்டு. வவுணதீவு

## வயலில் ஆர்பிஜி லோஞ்சர் மீட்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள நெடுஞ்சேனை வயல் பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த ஆர்பிஜி லோஞ்சர் ஒன்றை, நேற்று முன்தினம் (24) மாலை மீட்கப்பட்டுள்ளதாக, வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

குறித்த வயலில் உழவு இயந்திரம் மூலம் உழவு நடவடிக்கையில் வயல் உரிமையாளர் ஈடுபட்டுள்ள நிலையில், நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்து ஆர்பிஜி லோஞ்சா ஒன்று நிலத்தில் இருந்து வெளியே வந்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, குறித்த ஆர்பிஜி லோஞ்சர் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







வடக்கிலும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள்

# ஆரம்பம்

### மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்கு சமூகம்
### யாழில் மாணவர்களின் வருகை குறைவு

எஸ்.றொசேரியன் லெம்பேட், சண்முகம் தவசீலன், என்.ராஜ், க. அகரன், மு.தமிழ்ச்செல்வன்

ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள், நேற்றைய தினம் (25) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் தரம் 1 முதல் 5 வரையிலான ஆரம்ப பிரிவு வகுப்புகள் ஆரம்பமாகின.

பெற்றோருடனேயே, அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளித்தள்ளனர். அத்துடன், அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலை சீருடையுடனும் சில மாணவர்கள் சாதாரண ஆடையுடனும் பாடசாலைக்கு சமூகமளித்திருந்தனர்.

இதேவேளை, பாடசாலை நுழைவாயிலில், சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக, மாணவர்களின் உடல் வெப்பம் அளவீடு செய்யப்பட்டதோடு, ஏனைய சுகாதார நடைமுறைகளும் பின்பற்றப்பட்டன.

மேலும் வீதி போக்குவரத்து பிரிவு பொலிஸார் பாடசாலைகளுக்கு முன்னால், விசேட கடமையை முன்னெடுத்தனர்.





பாடசாலைகளுக்கு மாணவர்கள் ஆர்வத்துடன் வருகை தந்திருந்தனர். ஆசிரியர்கள் மாணவர்களை சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றச்செய்து பாடசாலை வளாகத்துக்குள் மாணவர்களை அழைத்திருந்தனர்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமையானது, தமக்கு மிகவும் மகிழ்ச்சி எனத் தெரிவித்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள், தாம் கல்வி கற்க முடியாது இருந்ததாகவும் இதனால் தாம் பரீட்சையை எதிர்கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் கூறினர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக காணப்படுவதாக, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், பாடசாலைக்கு வந்த மாணவர்களோடு கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில், பாடசாலைகளுக்கு கணிசமான மாணவர்கள் வருகை தந்திருந்ததுடன்,அதிகளவான மாணவர்களை கொண்ட பாடசாலைகளில் இரு பிரிவுகளாக மாணவர்களை பாடசாலைக்கு வருமாறு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டிருந்தது.

## அச்சுவேலி மக்களின் கவனத்துக்கு

செந்தூரன் பிரதீபன், எஸ் தில்லைநாதன்

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில், 'டெங்கில் இருந்து எம்மை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில், அச்சுவேலி பொலிஸார், நேற்று முன்தினம் (24), அச்சுவேலி பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில், சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக, டெங்கு நுளம்பு பரவக்கூடிய ஏதுவான சூழல் இனங்காணப்பட்டு, அவற்றை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு இருந்தனர்.

அச்சுவேலி - வல்லை வீதி, இராச வீதி, அச்சுவேலி நகரப் பகுதிகளில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் அச்சுவேலி - வல்லைப் பகுதிகளில் குப்பைகளை கொட்டும் நபர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலை வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராகவும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என, அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.







## மரக்கன்றுகள் நாட்டிவைப்பு...

மாருதம் பசுமை இயக்கத்தின் 6ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மாருதம் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், வவுனியா பல்கலைக்கழகத்தில், நேற்று (25), 600 மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டன.
(படப்பிடிப்பு: க. அகரன்)



## கிளி. ஆசிரியர்கள் போராட்டம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

பளை கல்விக் கோட்ட அலுவலகத்துக்கு முன்பாக, நேற்று (25) பிற்பகல் 2 மணியளவில், ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில், ஆசிரியர் போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில், கிளிநொச்சியிலும், நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



வெள்ளை பிரம்பு தின

## விழிப்புணர்வு பேரணி

க.விஜயரெத்தினம்

சர்வதேச வெள்ளை பிரம்பு தினத்தை முன்னிட்டு, விழிப்புலனற்றோர்களது உரிமைகளை எடுத்துரைக்கும் வகையில், மட்டக்களப்பில் நேற்று (25) விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மாவட்டச் செயலாளர் க.கருணாகரன் கலந்துகொண்டார்.

நிகழ்வின் கௌரவ அதிதியாக மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கரிகரராஜ், மட்டு லயன்ஸ் கழக வலய முதல்வர் கே.லோகேந்திரன், கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபரும், சமூக ஆர்வலருமான திருமதி திலகவதி ஹரிதாஸ் உட்பட தரிசனம் விழிப்புணர்வு நிலையத்தின் உத்தியோகஸ்தர்கள்,

> **மட்டு லயன்ஸ் கழக வலய முதல்வர் கே.லோகேந்திரன், கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபரும், சமூக ஆர்வலருமான திருமதி திலகவதி ஹரிதாஸ் உட்பட தரிசனம் விழிப்புணர்வு நிலையத்தின் உத்தியோகஸ்தர்கள்**

மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக, கடந்த வருடம் இவ்விழிப்புணர்வு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. அதேவேளை, நேற்றைய நிகழ்வு எளிமையான முறையில், விழிப்புணர்வு தரிசனம் பாடசாலைக்கு அருகில் விழிப்புணர்வு ஊர்வலமாக நடைபெற்றது.



# “எம்மைக் கைவிட்டு விடாதீர்கள்”

## ‘காட்டு லயம்” மக்கள் கோரிக்கை

ஆ.ரமேஸ்

இராகலை -சென்-லெனாட்ஸ் மேல்பிரிவு தோட்டம், இலக்கம் 33 தொடர் குடியிருப்பில் வசித்து வரும், 12 குடும்பங்களுக்கு பாதுகாப்பான இடத்தில் குடியிருப்புகள் அமைத்து கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை பெய்த கடும் மழை காரணமாக, சென் லெனாட்ஸ் மேல்பிரிவு தோட்டத்தில் காட்டு லயம் என அழைக்கப்படும் இலக்கம் 33 தொடர் குடியிருப்பின் பின்பகுதியில் உள்ள 30 அடி உயரமான மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இந்த சம்பவத்தில் யுவதி ஒருவர் மண்சரிவில் சிக்கி, தனது காலில் ஏற்பட்ட காயம் ஏற்பட்ட



நிலையில் மீட்கப்பட்டார்.

இதன் காரணமாக, மண்சரிவு அபாயம் எச்சரிக்கை விடுக்கப்பட்ட இத் தொடர் குடியிருப்பில் வசிக்கும், 12 குடும்பங்களை சேர்ந்த 37 பேர் சென் லெனாட்ஸ் தோட்ட முன்பள்ளி கட்டடத்தில் பாதுகாப்பாகவும் தற்காலிகமாகவும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த லயன் குடியிருப்பில் வசிக்கும், 12 குடும்பங்கள் மழைக்காலங்களில் தொடர்ந்தும் அச்சத்துடன் கடந்த 07 வருடங்களுக்கு மேல் வசிப்பதுடன் இம்முறை பாரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதன தெரிவித்தனர்.

தோட்ட நிர்வாகத்திடம் தமது நிலையை எடுத்துரைத்துள்ள போதிலும் சரியான தீர்வை பெற்று, மாற்று இடத்தில் பாதுகாப்பாக வாழ இடம் வழங்கவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தொடர்ந்தும் பாதுகாப்பான இடத்தில் வீடுகளை அமைத்து தம்மை வாழ வைக்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்தனர்.



### வீதியில் வடிகான் கட்டமைப்பு இன்மையால்

## சேற்றில் புரண்டு பாடசாலைக்கு வரும் மாணவர்கள்

டி.சந்ரு

நுவரெலியா பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும், 476A கிரிமிட்டி பிரிவுக்கு சொந்தமான கார்லிபேக் தோட்டத்தில், பாடசாலை வழியாக குடியிருப்புகளுக்கு செல்லும் வீதி, ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பாதை புனரமைக்கப்பட்டது.

இப்பாதை புனரமைத்து ஒரு வருட காலங்கள் கூட பூர்த்தியாகாத நிலையில், உரிய முறையில் வடிகான்கள் அமைக்காமையால், மழை நீர் இப் பாதையின் ஊடாக செல்வதால், இப் பாதைக்கு அருகாமையில் உள்ள பாடசாலைக்கு வரும் மாணவர்கள் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

இதற்கமைய,நேற்று (25) பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போது, அவர்களின் சீருடைகளில் சேற்று நீர் படிந்திருந்தமையை காணக்கூடியதாக இருந்தது.

எனவே சிறந்த வடிகான் கட்டமைப்புடன் இப்பாதையை அமைக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

### ஐந்து உயிர்கள் கருகிய விவகாரம்

## மகனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஆ.ரமேஸ்.

இராகலையில், ஒரே வீட்டுக்குள் ஐவர் எரிந்து கருக்கிய சம்பவத்துக்குப் பின்னர் சதேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அக்குடும்பத்தைச் சேர்ந்தவர், நவம்பர் மாதம் 8ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு வலப்பனை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் டி.ஆர்.எஸ். ஜினதாச முன்னிலையில் நேற்று (25) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஒக்டோபர் 7ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த குடும்பத்திலிருந்து உயிர்த் தப்பியிருந்த மகனான தங்கையா இரவீந்திரன் வயது (27) என்பவரை இராகலை பொலிஸார் இம்மாதம் 12ஆம் திகதியன்று கைது செய்திருந்தனர்.

சந்தேக நபர், நீதிமன்றத்தில் நேற்று (25) ஆஜர்படுத்தப்பட்டபோது, சந்தேநபர் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் மன்றில் ஆஜராகவில்லை. மனுதாரர் தரப்பில், இராகலை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி ஆஜராகிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதவான் டி.ஆர்.எஸ்.ஜினதாச, இரசாயன பரிசோதனை, மரண விசாரணை ,பிரேத பரிசோதனை உள்ளிட்ட அறிக்கைகள் மற்றும் வழக்குடன் தொடர்புடைய ஆவணங்களை , அடுத்த தவணையின் போது, நீதிமன்றத்துக்கு சமர்பிப்பதற்கு பொலிஸாருக்கு கால அவகாசம் வழங்கினார். வழக்கையும் நவம்பர் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## வீதிக்காக இருவேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்கள்

என்.ஆராச்சி, மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை- இரத்தோட்டை கம்மடுவ எலகல வீதியின் புனரமைப்பு பணிகள், இடைநடுவில் கைவிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, குறித்த வீதியை மறித்து பிரதேசவாசிகளால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (25) முன்னெடுக்கப்பட்டது.

இந்த வீதியின் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த ஒரு வருடங்களாக இதன் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், குறித்த வீதியைப் பயன்படுத்தும் எலகல, ஹுனுகெட்டி, புசுசெல்ல, கம்மடுவ, சிலன்கஹவத்த உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 4,000க்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த வீதியின் புனரமைப்பு பணிகளை விரைவாக ஆரம்பிக்குமாறு தெரிவித்தே, நேற்று (25) பிரதேசவாசிகளால்





ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, புளத்கொஹுபிட்டிய தேதுகல வீதியின் துல்கல சந்தியிலிருந்து நாரங்கல வரையான வீதியை புனரமைத்து தருமாறு நேற்று (25) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

4 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

### சிரேஷ்ட பிரிவு மாணவர்களை பாடசாலைக்கு அழைத்த

## அதிபருக்கு எச்சரிக்கை

### மாணவர்கள் திரும்பிச் சென்றனர்

ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன்- கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலையொன்றின் அதிபரால், குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் உயர்தரம் மற்றும் சாதாரணதர மாணவர்கள் நேற்றைய தினம்(25) பாடசாலைக்கு அழைக்கப்பட்டு, அவர்களுக்கு கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றைய தினம் நாடு முழுவதிலும் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கு மாத்திரமே கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், குறித்த



பாடசாலையின் அதிபர் சாதாரணதரத்தில் கற்கும் 40 மாணவர்களையும் உயர்தரத்தில் கற்கும் 15 மாணவர்களையும் பாடசாலைக்கு அழைத்து கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

இந்த நிலையில், 119 என்ற பொலிஸ் அவசர பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, ஹட்டன் பொலிஸார் சம்பந்தப்பட்ட பாடசாலைக்குச்

## கலவானையில் ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம்

கலவானை நகரில் நேற்று (25) ஐக்கிய தேசியக் கட்சியால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணத்தை வழங்குதல், ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை உறுதிசெய்தல், உர தட்டுப்பாட்டுக்குத் தீர்வை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் கட்டுபாடற்ற விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல் உள்ளிட்ட பல்வேறு



விடயங்களை வலியுறுத்தி, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐ.தே.கவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தலைமையில் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



## பாடசாலைகள் திறக்கப்பட்டன

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உள்ள அனைத்து ஆரம்பப்பிரிவு பாடசாலைகளும் நேற்று (25) ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலைகளுக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மலையக நிருபர்கள்)













# இனப்பரம்பலை மாற்றியமைக்கும் குடியேற்றங்களைக் கைவிடவும்

ஓர் இனத்தை முற்றுமுழுதாக இல்லாமல் செய்வதென்பது அரிதான விடயமாகும். ஆனால், மொழி, மதம் மற்றும் கலாசாரங்களில் கையை வைத்தால், அடுத்தடுத்த தலைமுறையினர் சிதைந்து சின்னாப்பின்னமாகிவிடுவர்.

இனத்தின் அடையாளத்தை அழிப்பதென்பது பெரும்பான்மையின அரசாங்கங்களுக்கு கைதேர்ந்த கலையாகும். வடக்கு, கிழக்குக்கு வெளியே சிறுபான்மையாக வாழும் சிறுபான்மையினத்தினரின் இன அடையாளங்கள், அழித்தொழிக்கப்படுவது குறைவு என்றாலும் இடைச்செருகல்கள் அதிகமாகும்.

உதாரணமாக, வழிபாட்டு சுற்றுலாத் தலங்களாக இருக்கும் இந்துக் கோவில்களுக்கு அருகிலேயே பௌத்த விஹாரைகள் நிர்மாணிக்கப்படும். அதனைச் சுற்றி, கொஞ்சம் கொஞ்சமாக பெரும்பான்மை இனத்தவர்கள் குடியேற்றப்படுவார்கள். இது அந்த பிரதேசத்தின் இனப்பரம்பலை மாற்றியமைத்துவிடும்.

வடக்கு, கிழக்கில் யுத்தத்துக்குப் பின்னர், அரச காணிகள் எனும் போர்வைக்குள்ளிருந்து பூர்வீக காணிகள் அபகரிக்கப்பட்டன. படைத்தளங்கள் இருக்கும் காணிகளில் பௌத்த விஹாரைகள் கட்டடப்பட்டன. அதற்கெல்லாம், ஒருபடி மேல் சென்று தொல்பொருள் ஆராய்ச்சி எனும் பெயரில், புத்தர் சிலையை வைத்து ஆராய்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்பட்டமை எமக்குத் தெரியும்.

அதுமட்டுமன்றி, தமிழ்ப் பெயரைக்கொண்ட கிராமங்களுக்கு சிங்கள பெயர் சூட்டப்பட்டும் உள்ளன. தற்போது மாகாணத்தைத் தாண்டிய எல்லை நிர்ணயம் முன்னெடுக்கப்படுகிறது. அதனூடாக பெரும்பான்மையாகத் தமிழர்கள் வாழும் பூர்வீக பூமியை, சிங்களமயமாக்குவது மட்டுமன்றி, இனப் பரம்பலை மாற்றியமைக்கும் முயற்சியாகும்.

ஜனாதிபதி தேர்தலைத் தவிர்த்து, பொதுத் தேர்தல், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு பின்னரான மக்கள் பிரதிநிதிகளைப் பார்க்குமிடத்து, எவ்வளவுக்கு எவ்வளவு குடியேற்றங்கள் அடாத்தாகச் செய்யப்பட்டுள்ளன என்பதெல்லாம் கண்கூடு.

வடக்கு, கிழக்குக்கு வெளியே மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவாகும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது தமிழ்மொழி பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, ஒவ்வோர் ஐந்தாண்டுகளிலும் சரிந்துகொண்டே செல்கிறது. எதிர்காலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் துர்ப்பாக்கியமான நிலைமையொன்று ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

இதற்கிடையே, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொச்சியான் குளம், தமிழ்மக்களின் பூர்வீக கிராமமாகும். அக்கிராமத்தின் பெயர் 'போபஸ்வெல' எனப் பெயர்மாற்றப்பட்டுள்ளது. அத்துடன், வடமத்திய மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட கெப்பட்டிக்கொல்லாவ, கனுகாவெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 600 குடும்பங்களையும், பதவியா கிராம அலுவலர் பிரிவு, கம்பிலிவெலலெதக்கன ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 430 குடும்பங்களையும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் வெடிவைத்த கல்லு கிராம அலுவலர் பிரிவுடன் இணைப்பதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இம்முயற்சிக்கு கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. அதனை உடனடியாக கைவிடவேண்டும். இனப்பரம்பலை மாற்றியமைக்கும் அந்தக் குடியேற்ற கொள்கையை கைவிடவேண்டுமென நாமும் வலியுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எங்கள் சுயநலமற்ற சேவைகளை உலகம் கேட்கின்றது. ஆனால், பல அரசியல்வாதிகளுக்குத்தான் அது புரிவதில்லை. ஒவ்வோர் அரசியல்வாதியும் தம்மைத்தாமே சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

பேச்சு சாதுரியம் மட்டும் பயன்தராது. ஒவ்வொரு தனிமனிதனின் தேவைகள், பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டும்; அதுதான் அவர்களின் கடமையாகும். காட்டுக்குள் உயிரினங்கள் சுதந்திரமாகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றன. ஆனால், மனிதனின் நிலை, அப்படியானது இல்லை.

இவை நல்லபடியாக அமைய, அரசியல்வாதிகள் பொறுப்புடன் தமது கடமைகளைச் செய்ய வேண்டும். ஆனால், பெரும்பாலான அரசியல்வாதிகள் முழுமையாக மக்கள் தேவைகளை பூர்த்திசெய்யவில்லை.

ஒருவரை ஒருவர் பழி சுமத்துவதில் ஏது பயன்? பின்விளைவற்ற எதிர்காலத்தைத் தெரிந்துகொள்வதே, சுயநலமற்ற அறிவின் வீரியமாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வவுனியா, பூந்தோட்டம்:

# சமூகவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும்

வவுனியா, பூந்தோட்டம் சந்திப் பகுதியில், இடம்பெற்றுவரும் சமூகவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் ஒன்று கூடும் சில இளைஞர்களால், பொதுமக்கள் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றார்கள். குறிப்பாக, மதுபோதையில் நிற்கும் அவர்கள், பெண்களுடன் அநாகரிமான முறையில் நடந்துகொள்வதுடன், தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதாக பொது மக்களால் குற்றச்சாட்டப்படுகிறது.

அத்துடன், தொழிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் பலரிடம், குறித்த நபர்கள் பணத்தைப் பறிப்பதாகவும் வியாபார நிலையங்களில் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்களிடம் வம்புச்சண்டை செய்கிறார்கள்.

எனவே, பூந்தோட்டம் சந்திப் பகுதியைப் பயன்படுத்தும் பொதுமக்களின் நன்மை கருதி, இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாகன கலந்துரையாடல், பூந்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, வடமாகாண ஆளுநர், வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், மகஜர் அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்துக்கு உரிய தரப்புகளால் தீர்வுகள் கிடைக்காவிடின் வர்த்தகர்கள், பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, மாற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

க. அகரன்

### அரசியல், சமூக ரீதியில்

# மீண்டெழ வேண்டிய முஸ்லிம்கள்

**மொஹமட் பாதுஷா**

பெரும்பான்மைக் கட்சிகளும் சில தமிழ்க் கட்சிகளும், உள்ளக முரண்பாடுகளைச் சந்தித்து, பலவீனப்பட்டுப் போயுள்ள இன்றைய காலகட்டத்தில், முஸ்லிம் கட்சிகள், அதைவிடப் பாதூரமான பலவீனத்துடன், ஒரு குறுகிய வட்டத்துக்குள் அரசியல் செய்து கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு, ஏனைய சமூகங்களை விட சற்று மாறுபட்டதாகும். ஏனெனில், முஸ்லிம்கள் சமூகம், அரசியல் ரீதியாக மட்டுமன்றி, சமய, சிவில் சமூக அடிப்படைகளிலும் தேக்கநிலையை அடைந்துள்ளது. எனவே, ஒரு சமூகமாகத் தங்களை மறுசீரமைத்துக் கொண்டு, பலப்படுத்த வேண்டிய தேவை முஸ்லிம்களுக்கு அதிகமாகவே இருக்கின்றது.

இந்த விடயத்தில், அரசியல்வாதிகளுக்குப் பிரதான பங்கிருக்கின்றது. இதன் முதற்கட்டமாக, முஸ்லிம் அரசியல் அணிகளின் கொள்கைகளும் அதிலுள்ள அரசியல்வாதிகளின் ஒன்றுக்கும் உதவாத போக்குகளும், முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது.

"இதோ! முஸ்லிம்களுக்கு அமைச்சுப் பதவி கிடைக்கப் போகின்றது", "ஆளுநராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படப் போகின்றார்" போன்ற குறுகியகால களிப்பூட்டும் செய்திகளால், ஒன்றும் ஆகப் போவதில்லை.

"கட்சித் தலைவரை மாற்றப் போகின்றோம்", "அமைப்பாளர் பதவியைக் கைப்பற்றப் போகின்றோம்", "உறுப்பினர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறிக் காலத்தை வீணடிப்பதாலும், சமூகத்துக்கு நல்லது நடக்க வாய்ப்பே கிடையாது என்பதை, விளங்கிக் கொள்ள வேண்டும்.

அதுபோல, ஜம்மியத்துல் உலமா சபை உள்ளிட்ட நெறிப்படுத்தல் அமைப்புகளும் புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய சிவில் சமூகமும், உத்வேகமாகச் செயற்பட வேண்டியிருக்கின்றது. மிக முக்கியமாக, ஒவ்வொரு சாதாரண பொது மகனும் தமது நாட்டின், சமூகத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

இலங்கையில் முஸ்லிம்கள், 2019ஆம் ஆண்டு ஏப்ரலுக்குப் பிறகு, கண்ணுக்குத் தெரியாத ஒரு சுழிக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளனர். கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளும் சமூக செயற்பாட்டாளர்களும் சமய நெறிப்படுத்தல் கட்டமைப்புகளும் பலமிழந்து, வாய்பொத்தி, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் அரசியலைப் பொறுத்தமட்டில், 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர், அதனது 'வினைத்திறன் வரைபு' இறங்குமுகமாகவே இருந்து வருகின்றது. கட்சிகள், தலைவர்கள், எம்.பிக்களின் எண்ணிக்கைகள் அதிகரித்தனவே தவிர, முஸ்லிம் சமூகத்துக்கான அரசியலில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

சமூகத்தின் பிரச்சினைகள் அப்படியே கிடப்பில் கிடக்க, அரசியல்வாதிகள் தம்மை வளர்த்துக் கொண்டார்கள். மக்கள் மனங்களை அன்றி, செல்வத்தையும் பதவிகளையும் உழைத்துக் கொண்டார்கள். இருப்பினும், தமக்கு அரசியலில் செல்வாக்கு இருப்பதான ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதில், அவர்கள் வல்லவர்களாக இருந்தார்கள்.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர், இலங்கையில் இனவாதத்தை மையமாகக் கொண்ட அரசியல் முன்கையெடுத்த பிறகு, முஸ்லிம் அரசியல்வாதிகளின் மந்திரங்கள், தந்திரங்கள் எல்லாம் பலிக்காமல் போயின. அல்லது, அவர்களது நிஜமான கனதியும் கொள்திறனும் வெளிப்பட்டது.

அக்காலப் பகுதியில், முஸ்லிம்களை சமய ரீதியாக ஒழுங்குபடுத்தகின்ற ஜம்மியத்துல் உலமா சபை போன்றவற்றின் செயற்பாடுகள், ஓரளவுக்குப் பலமாகவே இருந்ததாகச் சொல்லலாம். (இங்கே மாற்றுக் கொள்கைசார் மத அமைப்புகளைக் குறிப்பிடவில்லை.)

இருப்பினும், அளுத்கமை கலவரத்துக்குப் பின்னர், பொதுபலசேனா, இராவண பலய போன்ற கடும்போக்கு இயக்கங்களின் பெருவளர்ச்சியும் ஆட்சியாளர்களின் மௌனமும், முஸ்லிம் அரசியல், சமயக் கட்டமைப்புகளுக்குப் பெரும் சவாலாக அமைந்தன. இதைச் சமாளிப்பதற்காக, முஸ்லிம் சிவில் செயற்பாட்டாளர்கள், உத்வேகத்துடன் பணியாற்ற முற்பட்டதையும் அப்போது காண முடிந்தது.

ஆனால், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி காலை 9 மணியுடன் எல்லாம் தகர்ந்து, சுக்குநூறாகிப் போனது.

இலங்கையில் அடிப்படைவாதமும் பயங்கரவாதமும் வளர்கின்றது என்று இனவாத அமைப்புகள் கூறிய வேளைகளில், அதனை முஸ்லிம்கள் மறுத்துரைத்து வந்தனர். அத்துடன், இஸ்லாம் என்பது ஆயுதக் கலாசாரத்தையோ வன்முறையையோ வெறுக்கின்ற ஒரு 'சந்தி மார்க்கம்' என்ற உண்மையையும் வலியுறுத்தி வந்தனர். இதனை ஏனைய சமூகங்களின் மக்களும் நம்பியிருந்தனர்.

இருப்பினும், முட்டாள்தனமான முடிவொன்றின் மூலம், மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்திய சஹ்ரான் கும்பலல் எல்லாம் நாசமாகிப் போனது.

இவர்களை யாரோ இயக்கி இருக்கின்றார்கள் என்ற சந்தேகங்கள் இருந்தாலும், இஸ்லாமிய அடையாளத்தோடு இந்த மிருகங்கள்தானே இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கின்றார்கள் என்பதை மறுக்க முடியாது.

இந்தத் தாக்குதலின் பின்னர், நாம் மேலே குறிப்பிட்ட தரப்பினரான முஸ்லிம் அரசியல்வாதிகள், பொறுப்புவாய்ந்த சமய ஒழுங்குபடுத்தல் அமைப்புகள், சிவில் அமைப்புகள் எல்லாம் ஒரேயடியாக மௌனிக்கச் செய்யப்பட்டன. இது முஸ்லிம்களை எல்லா விடயங்களிலும் பலமிழக்கச் செய்து, இருட்டுக்குள் இருத்தி விட்டது.

இந்தத் தாக்குதலைப் பின்னால் இருந்து ஒரு தரப்பு வழிநடத்தி இருக்கின்றது என்று கூறப்படுவது உண்மையாக இருக்குமென்றால், அவர்களும் இதைத்தான் எதிர்பார்த்து இருப்பார்கள் என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த விடயமாகும்.

இந்தப் பின்னணியில், கடந்த இரண்டரை வருடங்களில் முஸ்லிம் சமூகம் பல பின்னடைவுகள், இழப்புகளைச் சந்தித்திருக்கின்றது. பல வருடங்களாக முஸ்லிம்கள் கட்டியெழுப்பிய நம்பிக்கையும் இன உறவும் தகர்க்கப்பட்டமை, முஸ்லிம்கள் தமது நியாயங்களைச் சொல்வதற்குப் பெரும் தடையாக அமைந்துள்ளது.

இதைப் பெருந்தேசியமும் ஆட்சியாளர்களும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றுதான் தெரிகின்றது. குறிப்பாக, முஸ்லிம்களின் அரசியல் பலம், மிக நுட்பமாகச் சிதறடிக்கப்பட்டு உள்ளது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர், தேசிய அரசியலில் முக்கியத்தும் வாய்ந்தவர்களாகக் காணப்பட்ட அரசியல்வாதிகள், இப்போது காணாமல் போய் இருக்கின்றார்கள். அவ்விதமாகவே, எல்லா ஆட்சிக்காலத்திலும் ஓரளவுக்கு அதிகாரத்துடன் இருந்த ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், அதாவுல்லா போன்ற முஸ்லிம் தலைமைகள், பெருமளவுக்கு ஓரங்கட்டப்பட்டு உள்ளதாகத் தோன்றுகின்றது.

அவர்களுக்குப் பதிலாக, இரண்டாம்நிலை அரசியல்வாதிகள் மிக லாவகமான முறையில் கையாளப்படுவதாகத் தெரிகின்றது. சமூகத்துக்காகவே 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிப்பதாகக் கூறிய 7 எம்.பிக்களும், ஒரு தனி அணியாகச் செயற்படுகின்ற போக்குகள் இதற்கு நல்ல உதாரணமாகும்.

ஆனால், இப்படியே தொடர்ந்தும் பயணிக்க முடியாது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள், பழைய - புதிய எம்.பிக்கள் என யாரும் மக்கள் மனங்களில் இல்லை என்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். இனியாவது, சமூகத்தின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான காலடியை எடுத்து வைப்பதன் மூலம், அதனை மாற்றியமைக்கலாம்.

அதைக் காலம் கடத்தாது செய்தேயாக வேண்டும். அவ்வாறு முஸ்லிம் அரசியலை மறுசீரமைப்புச் செய்து, அரசியல் மயப்படுத்தப்பட்ட பலமிக்க சமூகமாக மீண்டெழுவதன் மூலம் மட்டுமே, நிகழ்கால, எதிர்கால அரசியல் சவால்களை எதிர்கொள்ள முடியும்.

சமகாலத்தில், ஜம்மியத்துல் உலமா சபை போன்ற பொறுப்புவாய்ந்த முஸ்லிம் சபைகளும் தமது நடவடிக்கைகளை மீள்வாசிப்புச் செய்து, மறுசீரமைத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

முதலாவது, உலமா சபையும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதல்ல என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், அந்த விமர்சனங்கள் நாகரிகமான முறையில் முன்வைக்கப்பட வேண்டும். நல்ல ஆலோசனைகளை, கருத்துகளை உள்வாங்கி, உலமா சபை போன்ற கட்டமைப்புகள் செயற்பட வேண்டும்.

முஸ்லிம் அமைப்புகளைக் கண்காணிப்பதுடன், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு பொறிமுறை அவசியமாகின்றது. அத்துடன், காளான் போல உருவெடுக்கின்ற புதிதுபுதிதான மார்க்கக் கோட்பாட்டாளர்கள், செயற்பாட்டாளர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுப்பதும் தவிர்க்க முடியாதது.

இதேவேளை, முஸ்லிம் சிவில் அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும், மெதுமெதுவாக வழமைக்குத் திரும்ப வேண்டியுள்ளது. முஸ்லிம்கள் பற்றி ஏற்பட்ட சில தவறான புரிந்துணர்வுகள் களையப்பட்டுக் கொண்டிருக்கின்றமை, அதற்குச் சாதகமான களநிலையாக அமையலாம்.

சிவில் சமூகம் எனும் போது, எப்போதும் சில அமைப்புகளும் செயற்பாட்டாளர்களுமே களத்துக்கு வருகின்றார்கள். புத்திஜீவிகளும் பொன்னாடைக்காகவும் விருதுகளுக்காகவும் அலைகின்றவர்களும் பல்கலைக்கழக சமூகமும் தமது பட்டப்படிப்பை சீதனத்துக்கு காணிக்கை ஆக்குகின்ற நபர்களும், சமூக செயற்பாட்டுத் தளத்தை எட்டிப் பார்க்க வேண்டியுள்ளது. இவர்கள் எல்லோரும் காரியங்களை மிகக் கவனமாகச் செய்வது அவசியமாகும்.


அரசியல்வாதி தொடங்கி, பொறுப்பு வாய்ந்த அமைப்புகள் தொட்டு, ஒவ்வொரு முஸ்லிம் பொதுமகனும் சமூகத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காத வரையில், இச் சமூகம் மீண்டெழுவது கனவிலும்கூட சாத்தியமில்லை.

மும்பை

# வெற்று காகிதத்தில் கையெழுத்து வாங்கினர்

## பிரபாகர் செய்ல் புகார்

பொலிவுட் நடிகர் ஷாருக் கான் மகன்; ஆர்யன் கான் மீதான போதைப் பொருள் வழக்கில், அதிகாரிகள் தன்னிடம் வெற்று காகிதத்தில் கையெழுத்து வாங்கியதாக முக்கிய சாட்சியான பிரபாகர் செய்ல் புகார் தெரிவித்துள்ளார். மேலும் இந்த வழக்கில் பல கோடி ரூபாய் பேரம்பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




இந்நிலையில் பிரபாகர் செய்ல் தற்போது 'வீடியோ' ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

கடந்த 2ஆம் திகதி சொகுசு கப்பலில் சோதனை நடந்த அன்று இரவு கோசாவி என்னை அழைத்தார். கப்பலில் விருந்தினர்கள் வருகை தரும் பகுதியில் ஆர்யன் கானும், முன் தமேச்சா என்ற பெண் உட்பட வேறு சில நபர்களுடன் போதை பொருள் தடுப்பு படையினர் இருந்தனர். அவர்களை போதை பொருள் தடுப்பு படை அலுவலகத்துக்கு அழைத்து சென்ற பின், கோசாவியும், போதை பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி சமீர் வான்கடேவும் வெற்று காகிதத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினர்.

பின், சாம் டிசோஸா என்பவரை கோசாவி சந்தித்து பேசினார். அதன் பின் நாங்கள் காரில் புறப்பட்டு சென்றோம். அப்போது கோசாவி தொடர்ந்து சாம் டிசோஸாவுடன் அலைபேசியில் பேசிய படி வந்தார். அப்போது '25 கோடி ரூபாய் பெரிய தொகை, 18 கோடி ரூபாயை இறுதி செய்து கொள்வோம். அதில் 8 கோடி ரூபாயை சமீர் வான்கடேவுக்கு கொடுக்க வேண்டும்' என, பேசினார். அன்று மாலையில் கோசாவி, சாம் டிசோஸா, நடிகர் ஷாருக்கின் மேலாளர் பூஜா தட்லானி ஆகியோர் காரில் சந்தித்து 15 நிமிடங்கள் பேசினர். அருகில் உள்ள ஹோட்டலில் இருந்து பணத்தை பெற்று வரும்படி என்னை அனுப்பினர். வெள்ளை நிற காரில் வந்த சிலர், இரண்டு பைகள் நிறைய பணம் தந்தனர். அதை வாங்கி வந்து சாம் டிசோஸாவிடம் கொடுத்தேன். அதில் 38 லட்சம் ரூபாய் இருந்தது. இவ்வாறு அவர் கூறியுள்ளார். இந்த குற்றச்சாட்டை போதை பொருள் தடுப்பு படையினர் மறுத்துள்ளனர்.

# சம்பளத்தை உயர்த்திய கீர்த்தி



தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம் வரும் கீர்த்தி சுரேஷ், தற்போது தமிழில் ரஜினியுடன் 'அண்ணாத்த, செல்வராகவனுடன் 'சாணிக்காயிதம்' ஆகிய திரைப்படங்களில் நடித்து முடித்துள்ளார்.

இதுதவிர மலையாளத்தில் மோகன்லால் உடன் 'அரபிக்கடலின் சிங்கம்', தெலுங்கில் மகேஷ்பாபு உடன் 'சர்காரு வாரி பாட்டா', சிரஞ்சீவியுடன் 'போலா சங்கர், நானிக்கு ஜோடியாக 'தசரா' போன்ற திரைப்படங்களையும் கைவசம் வைத்துள்ளார்.

தொடர்ந்து முன்னணி நடிகர்களின் திரைப்படங்களில் நடித்து வருவதால், நடிகை கீர்த்தி சுரேஷ், சம்பளத்தை உயர்த்தி உள்ளதாக கூறப்படுகிறது.

நானி ஜோடியாக தசரா திரைப்படத்தில் நடிக்க கீர்த்தி சுரேஷ் அதிக சம்பளம் கேட்டதாகவும், இறுதியில் ரூ.3 கோடிக்கு உடன்பாடு ஏற்பட்டு இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது

உத்தரகண்டில்

# 'சிறுநீர் கழிக்க வேண்டாம்'



உத்தரகண்டில் பொது வெளியில் சிறுநீர் கழிக்க வேண்டாமெனக் கூறியவரை கையிலிருந்த துப்பாக்கியால் சுட்டதில், பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர். காயமடைந்த நபரைச் சுட்டவர் கொன்ஸ்டபிள் ஆவார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவரவதாவது, டேராடூனின் ராஜ்புட் பகுதியில் உள்ள ஒரு கடையொன்றுக்கு, பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் வந்தார்.

பொலிஸ் கொன்ஸ்டபிள், அந்த கடையில் தனக்கு தேவையான பொருட்களை வாங்கிவிட்டு, அருகில் உள்ள திறந்த வெளியில் சிறுநீர் கழித்தார். இதைப் பார்த்த கடை முதலாளி 'அங்கு சிறுநீர் கழிக்கக் கூடாது' எனக் கூறி அங்கிருந்து செல்லும்படி எச்சரித்தார். பின் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் ஆத்திரம் அடைந்த பொலிஸ் கொன்ஸ்டபிள், தன்னிடம் இருந்த கைத் துப்பாக்கியால் முதலாளியை சுட்டார். வயிற்றில் குண்டு பாய்ந்து காயமடைந்ததில் அவ்விடத்திலேயே சுருண்ட வீழ்ந்தார். இச்சந்தர்ப்பத்தில், பொலிஸ் கொன்ஸ்டபிள் அந்த பகுதியில் இருந்து தப்பிச் சென்றார். பொலிஸார், சம்பந்தப்பட்ட பொலிஸ் கொன்ஸ்டபிளைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

புதுச்சேரி



## சிறுமியிடம் பாலியல் சேஷ்டை ;

# கிரிக்கெட் பயிற்சியாளர் கைது

சிறுமியிடம் பாலியல்சேஷ்டையில் ஈடுபட்ட கிரிக்கெட் பயிற்சியாளரை மேட்டுப்பாளையம் பொலிஸார் கைது செய்து, சிறையில் அடைத்துள்ளனர்.

புதுச்சேரி, துத்திபட்டு கிரிக்கெட் சங்க பயிற்சியாளர், தன்னிடம் பயிற்சிக்கு வந்த, 16 வயது பிளஸ் 2 படிக்கும் சிறுமியிடம் பாலியல்சேஷ்டையில் ஈடுபட்டுள்ளார்.

சிறுமி, கிரிக்கெட் சங்க நிர்வாகிகளிடம் இதுபற்றி புகார் அளித்துள்ளார். கிரிக்கெட் சங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட சிறுமி, புதுச்சேரி குழந்தைகள் நலக்குழுவிடம் புகார் அளித்துள்ளார். குழந்தைகள் நலக்குழு விசாரணை நடத்தி, மேட்டுப்பாளையம் பொலிஸில் புகார் அளித்தது.

> **கிரிக்கெட் சங்க நிர்வாகிகளான, சினிமா டைரக்டர் ஷங்கரின் மருமகன் ரோகித், அவரது தந்தை தாமோதரன், பயிற்சியாளர் ஜெயகுமார், செயலர் வெங்கட் ஆகிய நால்வர் மீது போக்சோ பிரிவு 21ன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது**

பயிற்சியாளர் மீது 'போக்சோ' வழக்கு பதிந்தனர். சிறுமியின் புகாரை அலட்சியப்படுத்தியதாக, கிரிக்கெட் சங்க நிர்வாகிகளான, சினிமா டைரக்டர் ஷங்கரின் மருமகன் ரோகித், அவரது தந்தை தாமோதரன், பயிற்சியாளர் ஜெயகுமார், செயலர் வெங்கட் ஆகிய நால்வர் மீது போக்சோ பிரிவு 21ன் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்நிலையில், பத்துக்கண்ணு சந்திப்பு அருகே வந்த கிரிக்கெட் சங்க பயிற்சியாளரை, பொலிஸார் கைது செய்தனர்.

கலபுரகி

# குடும்பத் தகராறு மனைவி மரணம்

இன்று உலகத்தில் பல்வேறு விதமான சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதில் சில விசித்திரமானவைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

அதாவது ஒரு கணவன் தனது மனைவியிடம் 'ஆண் குழந்தை வேண்டும்' என சித்திரவதை செய்த சம்பத்தால், தனது மூன்று குழந்தைகளுடன் பெண் கிணற்றில் குதித்து தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது, பெண்ணுடன் இரண்டு குழந்தைகள் உயிரிழந்தன. ஒரு பெண் குழந்தை காப்பாற்றப்பட்டது. கலபுரகி ஆளந்தா அருகே உள்ள மாட்யாளா கிராமத்தை சேர்ந்த மனைவி, 28. இவருக்கு 4வயது, 2 வயது மற்றும் ஆறு மாத பெண் குழந்தைகள் இருந்தன. மூன்று பெண் குழந்தைகளும் இருந்தாலும், ஆண் குழந்தை பிறக்கவில்லை என கணவர் மனைவியை தினமும் சித்திரவதை செய்து வந்ததாக கூறப்படுகிறது. அதுபோல நேற்று காலை, மனைவியுடன் கணவன் தகராறு செய்துள்ளார். இதனால் வேதனை அடைந்தமனைவி, மூன்று குழந்தைகளுடன் சென்று அருகிலுள்ள கிணற்றில் குதித்துள்ளார். இதை பார்த்த கிராமத்தினர் உடனடியாக கிணற்றில் இறங்கி, மூன்று பேரையும் காப்பாற்ற முயற்சித்தனர். இதில் ஒரு குழந்தை காப்பாற்றப்பட்டது. தாய் மற்ற இரண்டு பெண் குழந்தைகளும் உயிரிழந்தன.

# ஹொலிவுட்டை உலுக்கிய 'ரஸ்ட்'

ஹொலிவுட்டில் பிரபலமான நடிகர்களில் ஒருவரான அலெக் பால்ட்வின் நடித்து, இணைந்து தயாரிக்கும் திரைப்படம் 'ரஸ்ட்'. நியூ மெக்ஸிகோவின், சாண்டா ஃபே பகுதியில் படப்பிடிப்பு நடைபெற்று வந்தது.

இதில் படப்பிடிப்புக்காக போலியான ஒரு துப்பாக்கி பயன்படுத்தப்பட்டது. வெடித்தால் சப்தம் மட்டும் வருவது போன்ற அந்தத் துப்பாக்கியை நடிகர் அலெக் பால்ட்வின் இயக்கியபோது உண்மையாகவே அதிலிருக்கும் குண்டு பாய்ந்து விட்டது.

இதில் ஒளிப்பதிவாளரான ஹலினா ஹட்சின்ஸ் மரணமடைந்தார். இயக்குநர் ஜோயல் சோஸா படுகாயங்களுடன் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் ஹொலிவுட் வட்டாரத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து பொலிஸார் படக்குழுவினரிடம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த சம்பவத்தால் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ள அலெக் பால்ட்வின் தான் நடிக்க வேண்டிய அனைத்து திரைப்படங்களின் ஒப்பந்தத்தையும் ரத்து செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.



இது விபத்து தான் என்று விசாரணையில் தெரியவந்திருந்தாலும் அலெக் பால்ட்வின் சிறிது காலம் தனது குடும்பத்துடன் இருக்க விரும்புவதாகவும் கூறப்படுகிறது.



## சூப்பர்ஸ்டாருக்கு

# தாதா சாகேப் பால்கே விருது

திரையுலகினருக்கு இந்திய மத்திய அரசினால் வழங்கப்படும் மிக உயரிய விருது தாதா சாகேப் பால்கே விருது. தமிழ் திரையுலகிலிருந்து சிவாஜி, கே.பாலசந்தர் ஆகிய இருவர் இந்த விருதினைப் பெற்றுள்ளார்கள்.

2019ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருது ரஜினிகாந்த்துக்கு அறிவிக்கப்பட்டது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த விழா நடத்தப்படாமல் இருந்தது. இந்த நிலையில், டெல்லியில் 67ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழா நேற்று (25) நடைபெற்றது.

இதில் ரஜினிக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு வழங்கினார். இதனையடுத்து, சமூக வலைத்தளத்தில் பலரும் ரஜினிக்கு வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

இந்த விழாவில் தனுஷுக்கு சிறந்த நடிகருக்கான விருது, விஜய் சேதுபதிக்கு சிறந்த உறுதுணை நடிகருக்கான விருது, 'ஒத்த செருப்பு' திரைப்படத்துக்காக பார்த்திபனுக்கு சிறந்த நடுவர் தேர்வு விருது, 'கேடி (எ) கருப்புதுரை' திரைப்படத்தில் நடித்த நாக விஷாலுக்கு சிறந்த குழந்தை நட்சத்திர விருது, 'விஸ்வாசம்' திரைப்படத்துக்காக இமானுக்கு சிறந்த இசையமைப்பாளர் (பாடல்கள்) விருது ஆகியவையும் வழங்கப்பட்டது.

# தமன்னாவின் அதிரடி


சர்வதேச அளவில் புகழ்பெற்ற சமையல் நிகழ்ச்சி 'மாஸ்டர் செஃப்'. இந்நிகழ்ச்சி தமிழ் மற்றும் தெலுங்கில் ஒளிபரப்பாகி வருகிறது. தமிழில் விஜய் சேதுபதியும், தெலுங்கில் தமன்னாவும் தொகுத்து வழங்கி வந்தார்கள்.

இந்த நிலையில், திடீரென்று தெலுங்கில் தமன்னா நீக்கப்பட்டு அனுசுயா தொகுத்து வழங்கி வருகிறார். எதற்காக தமன்னா நீக்கப்பட்டார் என்ற தகவல் தெரியாமலேயே இருந்தது.



தற்போது தமன்னாவின் வழக்கறிஞர் தரப்பு சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில், 'மாஸ்டர் செஃப்' தெலுங்கு பதிப்புக்கான சம்பள பாக்கி இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதாலும், தயாரிப்பு தரப்பான இன்னவேடிவ் ஃபிலிம் அகாடமியின் தொழில் முறையற்ற அணுகுமுறையாலும் தமன்னா சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

தயாரிப்பு தரப்பு தொடர்ந்து சம்பளம் தராமல், தொழில் ரீதியாக ஒழுங்காக நடந்து கொள்ளவில்லை என்றாலும் தமன்னா தனது மற்ற வேலைகளை ரத்து செய்துவிட்டு இந்த ஒட்டுமொத்த நிகழ்ச்சியை முடித்துத் தர வேண்டும் என்று தீர்மானமாக இருந்தார்.



# "நண்பன் மறைந்தாலும் நட்பு மறையாது"

மறைந்த ஹொலிவுட் நடிகர் போல்வோவாக்கர் மகள் திருமண விழாவில், மணமகளுடன் பிரபல நடிகர் வின் டீஸல் நடந்து வந்த தருணத்தை, ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

'பாஸ்ட் அண்ட் பியூரியஸ்' திரைப்படம் மூலம் இந்திய ரசிகர்களின் மனம்கவர்ந்தவர்கள் நடிகர்கள் போல்வோவாக்கர் மற்றும் வின் டீஸல்.


கடந்த சில வருடங்களுக்கு முன்பு போல்வோவாக்கர் கார் விபத்து ஒன்றில் மரணமடைந்தார். இந்நிலையில், அவரது மகள் மிடோ வோக்கருக்கு நடைபெற்ற திருமணத்தில் தந்தை இடத்தில் நடிகர் வின் டீஸல், மணமகளுடன் மணமேடைக்கு வந்தது ரசிகர்களை நெகிழ்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. பாஸ்ட் அண்ட் பியூரியஸ் திரைப்படத்தின் முதல் ஆறு பாகங்களில் நடித்தவர் .

திருவாரூர்

# திமிங்கல உமிழ்நீரை கடத்த முயன்ற இருவர் கைது

திமிங்கல உமிழ்நீரை வெளிநாட்டுக்கு கடத்த முயன்றதாக முத்துப்பேட்டை பகுதியைச் சேர்ந்த இரண்டு பேரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பகுதிகளில் இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்ட திமிங்கலத்தின் 'உமிழ் நீர்' விற்கப்படு வதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்தன.



இந்த நிலையில், முத்துப்பேட்டை அருகே உள்ள உப்பூர் பகுதியில் இருந்து திமிங்கலத்தின் உமிழ்நீர் வெளிநாட்டுக்கு கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் பொலிஸார் மற்றும் மாவட்ட வனத்துறையினர் உப்பூருக்கு சென்று கண்காணிப்பு பணி மேற்கொண்டனர்.

அப்போது அங்கு வெளிநாட்டுக்கு கடத்துவதற்காக ரூ.5 கோடி மதிப்பிலான 8 கிலோ எடை கொண்ட திமிங்கில உமிழ்நீரை 3 கட்டிகளாக மாற்றி பதுக்கி வைத்து இருந்ததை பொலிஸார் கண்டறிந்து, அவற்றை பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக வனத்துறையினர் தகவல் தெரிவிக்கையில்,

இதில் இலங்கையில் இருந்து திமிங்கலத்தின் உமிழ்நீரை சிலர் கட்டிகளாக மாற்றி கடத்தி வந்து, முத்துப்பேட்டையில் விற்பனை செய்ததும், அவற்றை வெளிநாட்டுக்கு கடத்தி சென்று விற்பனை செய்ய முயற்சி நடந்ததும் தெரியவந்தது.

இருபதுக்கு 20 உலகக் கிண்ணம்:

# இந்தியாவை வீழ்த்திய பாகிஸ்தான்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிவு நடைபெற்ற குழு இரண்டின் சுப்பர் 12 போட்டி ஒன்றில் இந்தியாவை பாகிஸ்தான் வென்றது. ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

இந்தியா: 151/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 57 (49), றிஷப் பண்ட் 39 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 3/31 [4], ஷடாப் கான் 1/22 [4], ஹரிஸ் றாஃப் 1/25 [4], இமாட் வசீம் 0/10 [2], மொஹமட் ஹபீஸ் 0/12 [2])

பாகிஸ்தான்: 152/0 (17.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் ஆ.இ 79 (55), பாபர் அஸாம் ஆ.இ 68 (52) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 0/28 [4], ஜஸ்பிரிட் பும்ரா 0/22 [3])

போட்டியின் நாயகன்: ஷகீன் ஷா அஃப்ரிடி






இந்நிலையில், இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஒன்று போட்டியில் தென்னாபிரிக்காவை மேற்கிந்தியத் தீவுகள் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நியூசிலாந்தை பாகிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.







அக்கரைப்பற்று றோயல் கிங் வி. க

## கிரிக்கெட் அணிவீரர்களுக்கு சீருடை

■ எம்.எல்.எஸ். டீன்

அக்கரைப்பற்று றோயல் கிங் விளையாட்டு கழக (ஆர். கே.எஸ்) கிரிக்கெட் அணி வீரர்களுக்கு சீருடை வழங்கி வைக்கும் நிகழ்வானது, கழகத்தின் அலுவலகத்தில், அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எம்.எம். றுக்சான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், அக்கரைப்பற்று இளைஞர் சேவை அதிகாரி சமீலுல் இலாஹி, விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.இம்று பஸ்கான், அக்கரைப்பற்று-16 கிராம சேவை உத்தியோகத்தர் லிதர்சன், கழகத்தின் ஆலோசகர் கலாபூசணம் நூர்தீன், ஐகொனிக் யூத்ஸ் அமைப்பின் தலைவரும், இளைஞர் கழக சம்மேளனத்தின் பிரதித் தலைவருமான யூ.எல். தில்ஷான், அமைப்பின் ஆலோசகர் எம்.எஸ். எம். றிஸ்வான் ஆகியோர் கலந்து கொண்டு கழக உறுப்பினர்களுக்கு புதிய சீருடைகளை வழங்கி வைத்தனர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## யுனைட்டெட்டைத் தோற்கடித்த லிவர்பூல்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா மூன்று கோல்களையும், நபி கெய்டா, டியகோ ஜோட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது. வெஸ்ட் ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை மிஷைல் அன்டோனியோ பெற்றிருந்தார்.

ஐக்கிய அமெரிக்க குரான் பிறி:


## ஹமில்டனைத் தடுத்து வென்ற வெர்ஸ்டப்பன்

நேற்று அதிகாலை நடைபெற்ற ஐக்கிய அமெரிக்க குரான் பிறீயில், றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

பந்தயத்தை முதலிடத்திலிருந்து ஆரம்பித்த நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன், ஆரம்பத்திலேயே முதலிடத்தை மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டனிடம் பறிகொடுத்திருந்தார்.

எனினும், முதலில் டயர் மாற்றத்தை மேற்கொண்டு, பிரித்தானியாவின் ஹமில்டனை தடுத்து பின்னர் வெர்ஸ்டப்பன் வென்றிருந்தார்.

அந்தவகையில், இரண்டாமிடத்தை நடப்புச் சம்பியனான ஹமில்டனும், மூன்றாமிடத்தை வெர்ஸ்டப்பனின் சக றெட் புல் அணியின் ஓட்டுநரான



மெக்ஸிக்கோவின் சேர்ஜியோ பெரேஸும் பெற்றனர்.

இந்நிலையில், இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் புள்ளிகள் பட்டியலில் 287.5 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் வெர்ஸ்டப்பன் உள்ளார். இரண்டாமிடத்தில் 275.5 புள்ளிகளுடன் ஹமில்டனும், 185 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஹமில்டனின் சக மெர்சிடீஸ் அணி ஓட்டுநரான பின்லாந்தின் வல்ட்டேரி போத்தாஸும் காணப்படுகின்றனர்.

## ஆஷஸ் குழாமில் ஸ்டோக்ஸ் இணைப்பு

ஆஷஸ் டெஸ்ட் குழாமுக்கான இங்கிலாந்துக் குழாமில் சகலதுறைவீரர் பென் ஸ்டோக்ஸ் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இவ்வாண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற இந்தியாவுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலிருந்து தனது இடது சுட்டு விரலுக்கு ஓய்வளிப்பதற்காக ஸ்டோக்ஸ் விலகியிருந்தார். இவ்வாண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற இந்தியன் பிறீமியர் லீக்கில் ராஜஸ்தான் றோயல்ஸுக்காக விளையாடும்போது விரலில் முறிவு ஏற்பட்டிருந்தது.



அமெரிக்கா

# சரிவடையும் பைடனின் செல்வாக்கு

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் செல்வாக்கு கடுமையாகச் சரிவடைந்துள்ளதாக அந்நாட்டின் பிரபல பத்திரிகை ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் குறித்த கருத்துக் கணிப்பின் படி ” அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்று முதல் 3 மாதங்களில் அவரது செல்வாக்கு 56% ஆக உயர்ந்திருந்த நிலையில் தற்போது 11.3 % ஆகக் குறைந்து 44.7% ஆக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2ஆம் உலகப்போருக்குப் பின்னர் எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியும் இப்படி ஒரு சரிவைச் சந்தித்தது இல்லை எனக் கருத்து கணிப்பு முடிவுகள் கூறுகின்றன.

ஜூலை மாதத் தொடக்கத்தில் அமெரிக்காவில் மீண்டும் கொரோனாப் பரவல் அதிகரித்தமை மற்றும் குழப்பமான சூழ்நிலையில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப்பெற்றமை போன்ற காரணங்களால் ஜோ பைடனின் செல்வாக்குச் சரிந்ததாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

## ஒரே பிரசவத்தில் பிறந்த சகோதரிகள் சாதனை

ஒரே பிரசவத்தில் பிறந்த அனிதா(Aneetta),ஏன்ஜல்( Anjel), அலீனா(Aleena), மற்றும் அனீஸா(Aneesha) என்ற நான்கு இளம் சகோதரிகள் பிரித்தானியாவில் புதிய சாதனையொன்றைப் படைத்துள்ளனர்.

கேரளாவை பூர்வீகமானக் கொண்ட இச் சகோதரிகளின் பிரத்தானியாவில் வசித்து வருகின்றனர்.

இவர்களது தாயார் ஜோபி(Joby) பிரித்தானியாவிலுள்ள பிரபல மருத்துவமனையொன்றில் செவிலியராக கடமையாற்றி வருகின்றார்.

இந்நிலையில் இச்சகோதரிகள் நாள்வரும் Suffolk பல்கலைகழகத்தில் செவிலியர் படிப்பை முடித்துவிட்டு, கேம்பிரிட்ஜில் இருக்கும் பிரபல வைத்தியசாலையில் செவிலியாராக கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஒரே பிரசவத்தில் பிறந்த நான்கு சகோதரிகள் ஒரே துறையில் கடமையாற்றுவது இதுவே முதன் முறை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா


## 16 வயதுக்கு உட்பட்டோருக்கு புதிய கட்டுப்பாடு

“அவுஸ்திரேலியாவில் , 16 வயதுக்கு உட்பட்டோர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தப் பெற்றோரின் அனுமதியைப் பெற வேண்டும்” என்ற சட்டத்தைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய மக்களின் தகவல்களையும் அந்தரங்கத்தையும் பாதுகாப்பதே இச்சட்டத்தின் நோக்கம் எனக் கூறப்படுகின்றது.

மேலும் இச் சட்டத்திற்கு இணங்காத இணையத் தளங்களுக்கு 7.5 மில்லியன் டொலர்கள் வரை அபராதம் விதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சமூக ஊடக நிறுவனங்கள், பயனாளர்களின் வயதை நிர்ணயிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்ட புதிய விதிமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் சமூக ஊடகங்களுக்கு ஆகக் கூடுதலான வயது வரம்புகளை விதிக்கும் நாடுகளில் ஒன்றாக அவுஸ்திரேலியா இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சீனா

## பெண்ணின் காதிற்குள் கேட்ட வினோத சத்தம்

தெற்கு சீனாவின் ஹுனான் மாகாணத்தில் உள்ள சூஜோவைச் சேர்ந்த யி (Yi ) என்ற பெண், தனது காதிற்குள் விசித்திரமான சத்தம் கேட்பதாகவும் அசௌகரியமாக உணர்வதாகவும் கூறி மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

அவரைப் பரிசோதித்த வைத்தியர் அவரது காதிற்குள் சிலந்தியொன்று உயிரோடு இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இதனையடுத்து அவரது காதிற்குள் ஒரு கெமராவைச் செலுத்திப் பார்த்த போது, அச் சிலந்தி அளவில் மிகவும் பெரியதாக இருந்ததாகவைத்தியர் தெரிவித்துள்ளார்.

மேலும் அப் பெண்ணின் காதிற்குள் சிலந்தி ஏறக்குறைய ஒரு இரவு முழுவதும் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எலெக்ட்ரிக் ஓட்டோஸ்கோப்பைப் பயன்படுத்தி சிலந்தியை அவரது காதிலிருந்து வைத்தியர் அகற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## 33 வருடங்களாக பாம்பின் விஷத்தை உடலுக்குள் செலுத்திவரும் நபர்

கடந்த 33 வருடங்களாக நபர் ஒருவர் பாம்புகளின் விஷத்தை தன் உடலுக்குள் செலுத்தி வரும் விநோத சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்று வருகின்றது.


லண்டனைச் சேர்ந்த 55 வயதுடைய ஸ்டீவ் லுட்வின் ( Steve Ludin ) என்பவரே இவ்வாறு பாம்புகளின் விஷத்தை ஊசியால் தன் மூட்டுகளில் செலுத்தி வருகின்றார்.


ஏழை நாடுகளில் உள்ள மக்கள் பாம்பு தீண்டுதலினால் அதிகளில் பாதிக்கப்படுகின்றனர். எனவே அவர்களுக்காக மருந்து கண்டுபிடிக்கும் நோக்கில் தான் இவ்வாறு செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது பாடசாலைப் படிப்பை முடித்துவிட்டு, லண்டனில் மிருகக்காட்சி சாலைகளுக்கு விலங்குகள் விற்பனை செய்யும் ஒரு நிறுவனத்தில் பணிபுரிந்த போதே தனக்கு பாம்புகளின் விஷங்கள் மீது ஆர்வம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 33 வருடங்களாக, பத்து நாட்களுக்கு ஒரு தடவை இவ்வாறு பாம்பின்







விஷத்தை தன் உடலுக்குள் ஊசியால் செலுத்தி வருவதாகவும் மேலும், தன் பொழுதுபோக்கிற்காக நாகபாம்புகளையும், ராட்டில்ஸ்னேக்ஸ் உட்பட சுமார் 33 விஷப்பாம்புகளையும் தன் வீட்டின் அறை ஒன்றில், வளர்த்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென் கொரியா

## வாடகை விருந்தினர்கள் FacebookTitterWhatsApp

திருமண விழாக்களில் விருந்தினர்களை வாடகைக்கு எடுக்கும் விநோத நடைமுறை தென் கொரியாவில் காணப்படுகின்றது.

திருமணவிழாவில் அதிகமானவர்கள் கலந்து கொள்வது சமூகத்தில் தமது பெருமையை மேலும் அதிகரிக்கும் என்பதற்காகவே அந்நாட்டு மக்கள் இந்நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு வாடகைக்கு அமர்த்தப்படுபவர்கள், சிறப்பாகத் தங்களை அலங்கரித்து விழாவில் கலந்து கொள்வார்கள் எனவும், அதற்கான பணத் தொகையும் அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்கள் மணமக்களின் மிக நெருங்கிய உறவினர்கள் போல் நடந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் திருமண விருந்திலும் கலந்து கொள்ளலாம் எனவும், ஆனால் மணமக்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை, 26 ஒக்டோபர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.